புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திருமதி. பி. உமாமகேஸ்வரி, இ.ஆ.ப,

ந.க.எண். 495/2019/பே.2.,

நாள் : 16 .03.2020

பொருள் பணிக்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருச்சிராப்பள்ளி மண்டலம் – புதுக்கோட்டை மாவட்டம் – பணியாளர் தொகுதி–IV – அரசு பணியாளர் தேர்வாணையம் – 2015-2016 2016-17 மற்றும் 2017-18 –ஆம் ஆண்டிற்கான தொகுதி–IV தேர்வு – தமிழ்நாடு– அமைச்சுப்பணி – புதுக்கோட்டை மாவட்டத்திற்கு – ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது– இளநிலை உதவியாளர் நிலையில் பணியினை வரன்முறைபடுத்தி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை

1) சென்னை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தின் கடிதம் எண்.927/PSD-C3/2019, நாள்.13.02.2019.
2) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.495/2017/பே.2, நாள்.25.02.2019.
3)அரசாணை எண். 271 ஊரக வளர்ச்சித் துறை, நாள்.04.04.1990.
4)அரசாணை எண்.191, பொதுத்துறை நாள்.01.02.1962
5) செயல் அலுவலர், ஆலங்குடி பேரூராட்சி கடிதம் ந.க.எண்.45/2019, அ1 நாள். 19.12.2019
6) செயல் அலுவலர், இலுப்பூர் பேரூராட்சி கடிதம் ந.க.எண்.171/2019, அ1 நாள். 31.12.2019.
7) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

ஆணை :

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய பார்வை (1)இல் காணும் கடிதத்தின்வழி 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ம் ஆண்டிற்கான தொகுதி–IV இல் அடங்கிய பணியிடங்களுக்கு நடத்த பெற்ற தேர்வில் தேர்வு செய்யப்பட்ட தேர்வாளர்களில், புதுக்கோட்டை மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பார்வை 2–இல் காணும் செயல்முறை ஆணையின்படி கீழ்க்குறிப்பிட்ட நபர்களுக்கு பணி நியமனம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி,தனியர்கள் இளநிலை உதவியாளர்களாக பணியேற்ற நாள் முதல் தேர்வாணையத்தால் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு பணியில் வரன்முறை செய்து ஆணைபிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | இளநிலை உதவியாளர் பெயர் மற்றும் அலுவலகத்தின் பெயர் | இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | பணிக் காலம் ஓராண்டு முடிவடையும் நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | செல்வி.எஸ்.எஸ்.ரேவதி, இளநிலை உதவியாளர், ஆலங்குடி பேரூராட்சி, புதுக்கோட்டை மாவட்டம். | 06.03.2019 மு.ப | 05.03.2020 பி.ப | 06.03.2019 மு.ப |
| 2 | திரு.சே.சின்னச்சாமி இளநிலை உதவியாளர், இலுப்பூர் பேரூராட்சி, புதுக்கோட்டை மாவட்டம். | 07.03.2019 மு.ப | 06.03.2020 பி.ப | 07.03.2019 மு.ப |

<u>நிபந்தனைகள்</u>

- இந்த பணிவரன்முறையானது 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ம் ஆண்டிற்காக நடத்தப்பெற்ற தொகுதி–IV இல் அடங்கிய சிவில் பணிகள் தேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம், சென்னை / மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகள் தொடர்பாக வெளியிடப்படும் தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

மேற்காணும் இளநிலை உதவியாளர்கள் பணியில் சேர்ந்த நாளில் உரிய மருத்துவ தகுதி சான்றினை சரிபார்த்தும், பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதற்கான அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி சம்மந்தப்பட்ட செயல் அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

16.3.20.

மாவட்ட ஆட்சித் தலைவர்
புதுக்கோட்டை

பெறுநர்
1) செல்வி. எஸ்.எஸ்.ரேவதி,
இளநிலை உதவியாளர்,
ஆலங்குடி பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.
2) திரு.சே. சின்னச்சாமி
இளநிலை உதவியாளர்,
இலுப்பூர் பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.
(சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் வழியாக)

நகல் –செயல்அலுவலர், ஆலங்குடி மற்றும் இலுப்பூர் பேரூராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்.
நகல் – பேரூராட்சிகளின் இயக்குநர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், சென்னை 28
நகல் – செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.
நகல் – பே2 இருப்புக் கோப்பிற்கு.